# ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவு : தாங்க முடியாத இழப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

வாழ்க்கையை அவரால் வாழ்ந்திருக்க முடியும். அவரைப் போன்ற பொருளாதார மேதைகள், சிந்தனையாளர்கள் அப்படிப்பட்ட வாழ்க்கையைத் தான் தேர்ந்தெடுப்பார்கள்.

### இந்திய வளர்ச்சிக்கு வித்திட்ட மன்மோகன் சிங் திட்டங்கள்!

ஆனால், எதிர்பாராத விதமாக அரசியலில் நுழைந்து நிதி அமைச்சராக அவர் பொறுப்பேற்றார். அதுவும், மிக நெருக்கடியான நேரத்தில் அந்த பொறுப்பை ஏற்று இந்திய நாட்டின் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்று சரித்திரத்தில் இடம் பெற்றிருக்கிறார். அவர் உருவாக்கிக் கொடுத்த பொருளாதாரத் திட்டங்கள் தான் இந்தியாவின் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது.

2004ஆம் ஆண்டு பிரதமர் நாற்காலி அவரைத் தேடி வந்தது. அவரை வந்து சேர்ந்தது. அந்த தேர்தலில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று, அன்றைக்கு பிரதமர் பொறுப்பை அன்னை சோனியா காந்தி அவர்கள்தான் ஏற்கவேண்டும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் மட்டுமல்ல. அனைத்து தலைவர்களும் சொன்னார்கள். ஆனால் பிரதமர் பதவியை அம்மையார் அவர்கள் மறுத்து, அதை டாக்டர் மன்மோகன் சிங்குக்கு கொடுத்ததுதான் அன்னை சோனியா அவர்களின் பெருந்தன்மை.

வலிமை வாய்ந்த அரசியல் தலைவராக இல்லாத, ஆக விரும்பாத, அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாத டாக்டர் மன்மோகன் அவர்கள், ஒரு முறையல்ல, இரண்டு முறை, மொத்தம் பத்து ஆண்டுகள் அந்தப் பொறுப்பில் இருந்து அவர் ஆட்சியை நடத்திக் காட்டியிருக்கிறார். அவருடைய ஆட்சிக்காலத்தில்தான் பல்வேறுத் திட்டங்கள்நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் எண்ணில் அடங்காதது! ஒவ்வொன்றும் மகத்தானவையாக அமைந்தது!

### மன்மோகன்சிங் ஆட்சியில் மகத்தான திட்டங்கள்

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம்
- மகளிருக்கு எதிரான வன் செயல்களைத் தடுக்கச் சட்டம்,
- தகவல் அறியும் உரிமைச் சட்டம்,
- கல்வி பெறும் உரிமைச் சட்டம்,
- உணவுப் பாதுகாப்புச் சட்டம்,
- லோக்பால் அமைப்புச் சட்டம்,
- வன உரிமைகள் அங்கீகரிப்புச் சட்டம்,
- நிலம் கையகப்படுத்தப்பட்டால் நியாயமான இழப்பீடுகளை வழங்கும் சட்டம்,
- கையால் மலம் அள்ளுவதைத் தடை செய்யும் சட்டம்,
- மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் அவரது ஆட்சியில்தான் நிறைவேற்றப்பட்டது.
- ஆதார் அட்டைகள்
- இந்தியாவிலேயே முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான 3ஜி தகவல் தொழில்நுட்பம்.
- 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி இப்படி பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்தவர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள்.

### மன்மோகன் சிங் அமைச்சரவையில், 21 தமிழ் அமைச்சர்கள்!

பத்தாண்டு கால மன்மோகன் சிங் அமைச்சரவையில், 21 தமிழர்கள் ஒன்றிய அமைச்சர்களாக இடம் பெற்றிருந்தார்கள். 8 கேபினட் அமைச்சர்கள், 13 இணை அமைச்சர்கள் என்று மிக அதிக அளவில் தமிழர்கள் ஒன்றிய அரசில் கோலோச்சியது அவருடைய அமைச்சரவையில் தான். அதுவும் மிகமிக முக்கியமான பல துறைகளை தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டது. அதன் மூலமாக எண்ணற்ற திட்டங்கள் நமக்கு கிடைத்தன. நமது நூற்றாண்டு கோரிக்கையான தமிழ் செம்மொழி என்பதை அறிவித்த வரலாற்றுச் சாதனைக்குச் சொந்தக்காரர்தான் மன்மோகன் அவர்கள்.

- சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்.
- சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம்.
- தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம்.
- சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு.
- திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம்.
- கடல்சார் தேசிய பல்கலைக் கழகம்.
- 3 ஆயிரத்து 276 கிலோ மீட்டர் சாலைகள் நான்கு வழிச் சாலைகளாக மேம்பாடு.
- ஓரகடத்தில் ஒன்றிய அரசின் தேசிய மோட்டார் வாகனச் சோதனை ஆராய்ச்சி மையம்.
- 1,553 கோடி ரூபாய் செலவில் சேலம் உருட்டாலை சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்பட்டு, புதிய குளிர் உருட்டாலை உருவாக்கம்.
- சென்னை துறைமுகம் மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம்.
- நெம்மேலியில் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்.
- சென்னை மாநகரில் மெட்ரோ இரயில்.
- ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம்.
- 6,000 கிலோ மீட்டருக்கும் அதிகமான தேசிய நெடுஞ்சாலை.
- தமிழ்நாட்டில் நீண்ட கோரிக்கையாக இருந்த சேது சமுத்திர திட்டம் தொடக்கம். இப்படி எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு வரக் காரணமாகயிருந்தவர் தான் மன்மோகன் சிங் அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் நெருங்கிப் பழகி, நட்போடு அவர் இருந்தது யாராலும் மறுக்க முடியாது. அதுதான் இத்தனை திட்டங்களை தமிழ்நாட்டிற்கு நாம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறோம். மிகப் பெரும் சிறப்புத் திட்டங்களைக் கொண்டு வந்து, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டின் வளர்ச்சியை வலுப்படுத்தியிருக்கிறோம். தமிழ்நாட்டின் கனவுகளை மதிப்பவராக டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் இருந்தார்கள். தென்னக மக்களின் குரல்கள் தேசிய அளவிலான திட்டங்கள், கொள்கைகளில் எதிரொலிப்பதை அவர் உறுதி செய்தார். அந்த வகையில் பார்த்தால், மன்மோகன் சிங் அவர்களின் இறப்பு என்பது தமிழ்நாட்டிற்கு மிக மிக மிக பெரும் இழப்பு என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

நண்பர் மதிப்பிற்குரிய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், அவருடைய மறைவு என்பது நிச்சயமாக சொல்கிறேன் என்னால் தாங்கி கொள்ள முடியாத இழப்பு. என்னை எப்போது சந்திக்க வந்தாலும் 'உங்கள் உடம்பு எப்படி இருக்கிறது' என்றுதான் கேட்பார்.

நானும் திரும்ப அவரிடத்தில் அதை தான் கேட்பேன். "நீங்கள் உங்கள் உடம்பை பார்த்துக்கொள்ளுங்கள்"என்றுதான் சொல்வேன். 'நீங்கள் எல்லோரும் சேர்ந்து என்னை எம்.எல்.ஏ.ஆக ஆக்கி இருக்கிறீர்கள், அந்த நம்பிக்கையை நிச்சயமாக காப்பாற்றுவேன், உழைப்பேன் உழைப்பேன்'என்று உறுதியுடன் கூறினார். ஆனால், உடல்நிலை மோசமாகி மருத்துவமனைக்கு சென்றபோதும், அவருடைய வீட்டாரிடத்தில் சொல்லியிருக்கிறார். 'என்னைச் சந்திக்க வேண்டும்' என்று அவர்கள் வீட்டில் இருப்பவர்களிடம் சொல்லியிருக்கிறார்.

### தாங்கிக்கொள்ள முடியாத இழப்பு!

இந்த செய்தி கிடைத்தவுடன் நான் உடனடியாக, மருத்துவமனைக்கு நான் சென்று பார்த்தேன். ஆனால், அவர் பேச முடியாத நிலையில் இருந்தார். ஏதோ சொல்ல முற்பட்டார். ஆனால், அவரால் பேச முடியவில்லை. அதைத்தான் இன்றைக்கு நினைத்துப் பார்க்கிறேன். அவரது மகன் திருமகன் ஈ.வெ.ரா மறைந்தபோது நான் வேதனைப் பட்டேன், மனம் உடைந்து போனேன். அவருக்கு நான் ஆறுதல் கூறினேன். மகன் மறைந்ததால் இளங்கோவன் அவர்கள் போட்டியிட்டு, அவர் வெற்றி பெற்று அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிக் கொண்டிருந்தார். ஆனால், அந்த மகிழ்ச்சியும் நீடிக்காத வகையில் அவர் நம்மைவிட்டு பிரிந்துவிட்டார். அதனால்தான் தாங்கிக்கொள்ள முடியாத இழப்பு என்று நான் கூறினேன்.

தந்தை பெரியார் குடும்பத்தின் பெருஞ்செல்வம் மட்டுமல்ல அவருடைய தந்தையார் ஈ.வெ.கி.சம்பத் அவர்கள் பேரறிஞர் அண்ணாவுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் நெருக்கமான நண்பராக, தோழராக இருந்தார்.

### தயக்கம் இல்லாமல் பேசக்கூடியவர் இளங்கோ!

திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டு சம்பத் அவர்கள் விலகிய பிறகும், அவரை பேரறிஞர் அண்ணா அவர்கள் விமர்சிக்கவில்லை. அதேபோல் சில நேரங்களில் இளங்கோவன் அவர்களும் கலைஞர் அவர்களை அரசியல் சூழல் காரணமாக விமர்சிப்பார். ஆனால், கலைஞர் அவர்கள், அவரைப்பற்றி எதுவும் பேச மாட்டார். காரணம், 'சம்பத் பையன்தானே' பேசட்டும் என்று பெருந்தன்மையோடு இருப்பார்.

மனதில் உள்ளதை மறைக்காமல் – அதே நேரத்தில் துணிச்சலாக தெளிவாக – எதைப் பற்றியும் கவலைப்படாமல், தயக்கம் இல்லாமல் பேசக் கூடியவர்தான் நம்முடைய திரு.ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள். ஆதரித்தாலும் சரி – எதிர்த்தாலும் சரி அதைச் சரியாக, உறுதியாக செய்யக் கூடியவர் நம்முடைய இளங்கோவன் அவர்கள்.

ஈரோடு கிழக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மிகத் தெளிவாக மேடைகளில் அவர் விளக்கிப் பேசினார். அதைவிட மற்றொன்றையும் கூறினார். "இதுதான் உண்மையான காமராசர் ஆட்சி" என்று அவர் வெளிப்படையாக கூறியவர்தான் அவர்.

தேசிய குடும்பத்தில் பிறந்து, தேசியவாதியாக வாழ்ந்து மறைந்த இளங்கோவன் அவர்கள் இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு கொடுத்த நற்சான்றுப் பத்திரம் அது என்பதை நான் இப்போதெல்லாம் நினைத்து நினைத்து பெருமைப்படுகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக, ஒன்றிய அமைச்சராக என்று எந்தப் பதவியில் இருந்தாலும் அந்தப் பதவியில் முத்திரைப் பதித்தவர் நம்முடைய இளங்கோவன் அவர்கள்.

டாக்டர் மன்மோகன் சிங் அவர்களும் எவ்வளவு நெருக்கடியான நேரத்திலும் நாடாளுமன்றப் பணிகளில் பங்கெடுத்தார் என்பது உங்களுக்குத் தெரியும். அங்கு பங்கெடுத்து பதிலும் அளித்திருக்கிறார். வயது முதிர்ந்த நிலையிலும் சக்கர நாற்காலியில் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்தவர் நம்முடைய மன்மோகன் சிங் அவர்கள்.

இப்படிப்பட்ட இரு தலைவர்களை நாம் இழந்திருக்கிறோம். ஆகவே, என்னுடைய புகழஞ்சலியை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தெரிவித்து, என் புகழுரையை நிறைவு செய்கிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் துணிச்சலாக - தெளிவாகப் பேசக்கூடியவர் !



**மனதில் உள்ளதை மறைக்காமல் - அதே நேரத்தில் துணிச்சலாக தெளிவாக - எதைப் பற்றியும் கவலைப் படாமல், தயக்கம் இல்லாமல் பேசக் கூடியவர்தான் நம்முடைய ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள். ஆதரித்தாலும் சரி - எதிர்த்தாலும் சரி அதைச் சரியாக, உறுதியாக செய்யக் கூடியவர் நம்முடைய இளங்கோவன் அவர்கள்.**

**ஈரோடு கிழக்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பின ராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நம்முடைய திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மிகத் தெளிவாக மேடைகளில் அவர் விளக்கிப் பேசினார். அதைவிட மற்றொன்றையும் கூறினார். "இதுதான் உண்மையான காமராசர் ஆட்சி" என்று அவர் வெளிப்படையாக கூறியவர்தான் அவர்.**

**தேசிய குடும்பத்தில் பிறந்து, தேசியவாதியாக வாழ்ந்து மறைந்த இளங்கோவன் அவர்கள் இந்த திராவிட மாடல் ஆட்சிக்கு கொடுத்த நற்சான்றுப் பத்திரம் அது என்பதை நான் இப்போதெல்லாம் நினைத்து நினைத்து பெருமைப்படுகிறேன். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக, ஒன்றிய அமைச்சராக என்று எந்தப் பதவியில் இருந்தாலும் அந்தப் பதவியில் முத்திரைப் பதித்தவர் நம்முடைய இளங்கோவன் அவர்கள்.**

---

### டெல்லி சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பு!

## ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல்!

### பிப். 5- ல் நடைபெறுகிறது!

புதுடெல்லி, ஜன.9-

டெல்லி சட்டப்பேரவைத் தேர்தல் அறிவிப்பை தேர்தல் ஆணையம் டெல்லியில் நேற்று அறிவித்தது. அப்போது, தமிழ்நாட்டில் காலியாக உள்ள ஈரோடு கிழக்கு தொகுதிக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. இங்கு பிப்ரவரி 5ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. டெல்லி சட்டப் பேரவைக்கு பிப். 5 அன்று தேர்தல் நடைபெறும். ஜனவரி 10ம் தேதி மனு தாக்கல் தொடங்குகிறது. பிப்ரவரி 8ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

2023ம் ஆண்டு ஜனவரி 4ம் தேதி திருமகன் ஈ.வெ.ரா. உயிரிழந்தார். அப்போது அவருக்கு வயது 46. இதனையடுத்து, அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலில் காங்கிரஸ் சார்பில் மறைந்த திருமகன் ஈ.வெ.ரா.வின் தந்தை ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் போட்டியிட்டார்.

கடந்த சில மாதங்களுக்கு முன் உடல்நலக்குறைவாகப் பாதிக்கப்பட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில், கடந்த டிசம்பர் மாதம் 14ம் தேதி மறைவெய்தினார். இதனையடுத்து, டிசம்பர் 18ம் தேதி ஈரோடு கிழக்கு தொகுதி காலியானதாக தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் பிப்ரவரி 5ஆம் தேதி அன்று தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

---

### துணை வேந்தர் நியமன தேடுதல் குழு குறித்த யு.ஜி.சி. அறிவிக்கை; அரசியல் அமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானது!

## யு.ஜி.சி.யின் வரம்பு மீறிய இச்செயலுக்கு எதிரான போராட்டத்தை - தமிழ்நாடு சட்டரீதியாக, அரசியல் ரீதியாக முன்னெடுக்கும்!

### வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, ஜன.9-

**துணைவேந்தர் நியமன தேடுதல் குழுவை ஆளுநரே முடிவு செய்வார் என்று யு.ஜி.சி. வெளியிட்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவுவில், "யு.ஜ.சி.யின் வரம்பு மீறிய இச்செயலுக்கு எதிரான போராட்டத்தை தமிழ்நாடு, சட்டரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், முன்னெடுக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு :-

துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர்களுக்குப் பரந்த அதிகாரங்களை வழங்குவது மற்றும் கல்விப் புலம் சாராதோரும் துணை வேந்தர் ஆகலாம் எனும் பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய விதிமுறைகள் கூட்டாட்சியியல் மற்றும் மாநில உரிமைகளுக்கு எதிரான நேரடித் தாக்குதல் ஆகும். ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த எதேச்சதிகார முடிவு அதிகாரக் குவியலுக்கு வழிவகுத்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைச் சிறுமைப்படுத்துவதாக உள்ளது.

மக்களால் தேர்தெடுக்கப்பட்டவர்களிடம்தான் கல்வி தொடர்பான அதிகாரங்கள் இருக்க வேண்டும், பா.ஜ.க. அரசின் கைப்பாவையாகச் செயல்படும் ஆளுநர்கள் கைக்கு அது செல்லக்கூடாது.

தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களை நாட்டிலேயே அதிக அளவில் கொண்டுள்ள தமிழ்நாடு நமது கல்வி நிறுவனங்களின் தன்னாட்சி பறிக்கப்படுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டு அமைதியாக இருக்காது.

அரசியலமைப்புச் சட்டப்படி கல்வி ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளது. எனவே, தன்னிச்சையாக இந்தப் புதிய விதிமுறைகள் தொடர்பான அறிவிக்கையை யு.ஜி.சி. வெளியிட்டது அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பானதாகும். இந்த வரம்புமீறிய செயலை ஏற்கமுடியாது. இதற்கு எதிராக, சட்டரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் போராட்டத்தைத் தமிழ்நாடு முன்னெடுக்கும்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.